1972 மார்ச் 14]

*493. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"கதர் கிராமத் தொழில் வாரியம்" என்பதை கிராமத் தொழில் வாரியம் என்று மாற்றியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கதர்த் தொழில் லாபகரமாக இல்லை, நஷ்டத்தில் இயங்குகிறது என்று அமைச்சர் அவர்கள் தம் பதிலில் சொன்னார்கள். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற அரசு ஊழியர்களுக்கு மாற்று வேலை கொடுத்து விட்டு படிப்படியாக கதர் உற்பத்தியை அரசு கைவிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிலைக் கைவிடுவதாக எண்ணம் இல்லை. இப்போது இருக்கிறவர்களை வைத்துக் கொண்டே அந்தத் துறையில் ஏற்படுகிற நஷ்டத்தைக் குறைக்கிற அளவில் பல புதிய தொழில்களை ஆரம்பிக்கிற திட்டங்கள் அமலாகிக் கொண்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன் : முன்பு அமரர் அண்ணா அவர்கள் . Khadi is a political fad, but an economic impossibility ' என்பதாகச் சொல்லியிருக்கிறார்களே அது அரசுக்குத் தெரியுமா? அந்த கதர் வாரியத்தையே எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அண்ணா அவர்கள் ' Khadi is a political fad, but an economic impossibility ' என்று குறிப்பிட்டார்கள் என்றால் அந்த இரண்டுமே ஒப்புக்கொள்ளக்கூடியதுதான். அவர்கள் கிஸ்லான் கதரைப் பற்றியே சொன்னார்கள். அவர் கைப்படவே 12 கதிர்கள் உள்ள ராட்டை உடனடியாகப் புகுத்தப்பட வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். அப்போது economic impossibility என்கிற நிலை நிச்சயமாக இருக்காது.

திரு. நா. வீராசாமி : கதர் வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் போர்டு என்று இருப்பதற்குப் பதிலாக கதருக்கு என்று தனியாக ஒரு வாரியமும், கைத்தொழில்களுக்கு என்று தனியாக ஒரு வாரியமும் அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா? இன்றைக்கு இவை இரண்டும் ஒரே வாரியமாக இருப்பதனால் பல கைத் தொழில்கள் முன்னேற முடியாமல் இருக்கின்றன. தோல் பதனிடுதல்,

எண்ணெய் தயாரித்தல் போன்ற பல கைத்தொழில்கள் வளர்ச்சி அடைய உதவியாக கைத் தொழில்களுக்கு என்று தனியாகவே ஒரு வாரியம் அமைப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கதர் என்பதே கைத்தொழில்தான். அதை இரண்டாகப் பிரிக்க வேண்டிய தேவையில்லை. ஆயினும் இப்போது அந்த வாரியத்தில் கதர் சம்பந்தப்பட்ட கணக்கு தனியாகவும், கைத்தொழில்கள் சம்பந்தப்பட்ட கணக்கு தனியாகவும் தான் வைக்கப்பட்டு வருகின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கதர் உற்பத்தியில் பல்லாயிரக்கணக்கான ஏழைகள், பெண்கள் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு வேறு தொழில் கிடையாது. இந்தத் தொழிலைக் கைவிடும் திட்டம் ஏதாவது இருக்கிறதா? அப்படி இருந்தால் அந்தத் தொழிலில் பாதிப்பு பெரும் அளவில் ஏற்படாதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்தத் தொழிலைக் கைவிடுவதாக எண்ணம் இல்லை. ஆனால் இப்போது கதர் உற்பத்தியில் ஈடுபடுகிற பெண்கள் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை இடது கையாலும் வலது கையாலும் மாற்றி மாற்றிச் சுற்றி கை ஓய்ந்த நிலையில் அவர்கள் ஒரு நாளைக்குச் சம்பாதிப்பது ஒண்ணேமுக்கால் ரூபாய்தான். இந்த நிலைமையை மாற்றி அவர்களுடைய உடல் உழைப்பு குறைவதற்கும், ஊதியம் 2½ ரூபாய் அளவுக்காவது அதிகம் வருவதற்கும் 12 கதிர்களைக் கொண்டு விசையினால் ஓடக்கூடிய தறிகளைப் புகுத்தி வருகிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது 12 ஸ்பிண்டில் போட்டு மின்சாரத்தில் இயக்க இருப்பதாக ஏற்கெனவே சொன்னார்கள். கிராமத்தில் உள்ளவர்களுக்கு வருமானம் கொஞ்சமாவது கிடைக்க வேண்டும் என்கிற அடிப்படையில்தான் ராட்டைகளே கொண்டு வரப்பட்டன. இயந்திரத்தால்—விசையால் இயக்கச் செய்யும் நிலையை ஏற்படுத்திவிட்டால் ஸ்பின்னிங் மில்களுக்கும் இதற்கும் என்ன மாறுபாடு, வித்யாசம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : திரு. சுரேந்திரன் அவர்களுக்கு ஸ்பின்னிங் மில்களைப் பற்றி நன்கு தெரியும். ஒரு மில் என்றால் பன்னிரண்டாயிரம் கதிர்கள் இருக்கும். பன்னிரண்டு வேறு—பன்னிரண்டாயிரம் வேறு. இப்போது அவர்களுக்கு இருக்கிற அதிகமான உடல் உழைப்பைக் குறைக்கவும் குறைவாகக் கிடைக்கிற ஊதியத்தை அதிகப்படுத்தவுமே 12 கதிர்கள் புகுத்தப் படுகின்றன.

1972 மார்ச் 14]

திரு. கே. எ. வகாப் : காதியில் உள்ள இந்தக் குடிசைத் தொழில்களை தொழில் கூட்டுறவு சங்கங்கள் நடத்துகின்றன. அந்தக் கூட்டுறவு சங்கங்களோடு குடிசைத் தொழில் சங்கங்களையும் சேர்த்துவிட்டால் திறமையாக நடைபெற வாய்ப்பு இருக்காதா? அதை அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கதர் கைத்தொழில் வாரியத்தில் எல்லாத் தொழில்களுமே கூட்டுறவுத் துறையில் நடக்க வேண்டுமென்றுதான் 11-வது செக்ஷனில் இருக்கிறது. கூட்டுறவுத் துறையில்தான் பெருவாரியாக நடந்து கொண்டு வருகிறது.

Tourist Bungalow for Honaguruki.

* 494 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a tourist bungalow near the Great Banian tree at Honaguruki in Kelamangalam block, Dharmapuri district; and

(**b**) if so, when it will be constructed?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY : Sir, the banian tree at Honaguruki is an historical tree and previously, the Britishers used to hold Jamabandis there; there is a temple and a Kalyana Mantapam also and marriages are performed there. At the time of the visit of our Governor, he promised to recommend to this Government to construct a tourist bungalow for tourists. May I request the Hon. Minister to consider the recommendation sympathetically?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, சுற்றுலாத்துறையின் மூலமாக சுற்றுலா விடுதிகள் கட்டுவதுபற்றி திரு. வெங்கடசாமி அவர்கள் இங்கே கேட்டார்கள். கௌமங்களம் வட்டத்தில் ஹோனகுருக்கியில் இருக்கிற ஆலமரம் சிறப்பானது. அதை நானும் பார்த்திருக்கிறேன். ஆனால் அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கத்தக்க சிறப்புடையது அல்ல. அதிகமாக வருவார்கள் என்று விடுதி கட்ட முடியாது. அல்லது விடுதி கட்டி அந்த ஆலமரத்தைக் காட்டி பயணிகளை ஏமாற்றவும் அரசு தயாராயில்லை. ஆகவே தற்போதுள்ள நிதி நிலைமையில் அங்கே விடுதி கட்டுவது என்பது இப்போது இயலாத காரியம்.